(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | CC.No.152/2023 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW–1

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருள் மாணிக்கம் |
| க/பெ | : | நட்ராஜன் |
| கிராமம் | : | கூடன்குளம் |
| வட்டம் | : | இராதாபுரம் |
| வயது | : | 65 |

**( 1,2,3 எதிரிகள் ஆஜர்)**

2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது கூடன்குளத்தில் வசித்து வருகிறேன். நான் வயதோகிகமம் காரணமாக ஓய்வில் இருந்து வருகிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கின் 4 வது எதிரி இறந்து விட்டார்.

2) கடந்த 09.02.2024 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் எதிரி நல்லதம்பி வீட்டிற்கு நான் கடனாக கொடுத்த ரூ. 6 லட்சத்தை திருப்பி கேட்க சென்றேன். அங்கு இருந்த எதிரிகள் நல்லதம்பி, பவுல்ராஜ், ராஜதுரை, அகஸ்டின், மனோன்மணி ஆகியோர்கள் இருந்தார்கள். எதிரிகளிடம் நான் பணத்தை கேட்ட போது எதிரி பவுல்ராஜ் கையால் எனது தலையில் தாக்கி காயம் ஏற்படுத்தினார். நல்லதம்பி, ராஜதுரை, மனோன்மணி ஆகியோர்கள் அனைவரும்

என்னை அடித்தார்கள். எதிரிகள் அனைவரும் தேவடியா மவளே என்று அசிங்கமாக ஏசி உன்னை கொன்று புதைத்தால் தான் வரமாட்டாள் என்று ஏசி விடிட்டினார்கள். நான் சிகிட்சைக்காக அருகில் இருந்த ஆட்டோவில் கூடன்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிட்சையில் இருந்த போது அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் வழக்கு சம்பந்தமாக நான் கொடுத்ததுதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறிரீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1) எதிரிகள் வீட்டிற்கும் உங்கள் வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் 1 கி.மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் 5 வருடங்களுக்கு முன்பு மனோன்மணி ரூ 6 லட்சம் கடனாக வாங்கியதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி கடனுக்கு ஆதரவாக வாங்கிய கடனுறுதி சீட்டை போலீஸ் விசாரணையில் ஒப்படைத்தேன். எதிரிகள் மீது உரிமையில் வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் விசாரணையில் ஒப்படைத்த கடனுறுதி சீட்டை இந்த வழக்கல் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனோன்மணி உங்களிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும், அவ்வாறு கடன் பெற்று இருந்ததால் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் பிறப்பித்து கொடுத்து இருப்பார் என்றாலும் அதனை வழக்கில் நீங்கள் தாக்கல் செய்து இருப்பீர்கள் என்றாலும் சரியல்ல.

2) மனோன்மணி கடனாக வாங்கியதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளீகள் என்றால் சரியல்ல. 5 வருடத்திற்கு முன்பு கொடுக்கப்பட்ட கடன் காலாவதியான கடன் என்றால் சரியல்ல. உங்கள் புகார் மனுவில் நல்லதம்பி மகன் பவுல்ராஜ் பணம் திருப்பி கேட்டதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கின் பட்டியல் 5,6,7 சாட்சிகள் உங்கள் மகன்கள்

என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்து 1 வாரம் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 16.02.2021 அன்று உங்கள் மகன்கள் ஊரில் இல்லை என்றால் சரிதான்.

3) நீங்கள் மருத்துவமனை செல்ல யாருடைய ஆட்டோ என்று எனக்கு தெரியாது. அதை நான் போலீஸ் விசாரணையில் குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் இருந்து போலீசார் உங்களை அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிட்சையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிட்சையில் இருந்தபோது 2 நாட்கள் கழித்து பிறகு புகார் வாக்குமூலம் வாங்கி சென்றார்கள். புகார் வாக்குமூலத்தை நீங்கள் வாசித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. புகார் வாக்குமூலம் பதிவு செய்ததற்கான மனு ரசீது பதிவு செய்யப்பட்டதா என்றால் அது கொரோன பெருந்தொற்று காலம் ஆகும். அதுபற்றி எனக்கு தெரியாது.

4) முதல் தகவல் அறிக்கை நகல் உங்களுக்கு கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கவில்லை. மருத்துவமனையில் வைத்து போலீசார் விசாரித்த பிறகு மீண்டும் விசாரணை செய்யவில்லை. காயங்கள் எதிரிகளால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தன்னிசையாக காயத்தை ஏற்படுத்தி எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் வழக்கு சம்பவம் வீட்டிற்குள் வைத்து நடந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் முதலில் வீட்டிற்குள் வைத்தும் பின்னர் வெளியே வைத்தும் நடைபெற்றது. சாட்சி 4, 1 வது எதிரியின் மனைவி என்றால் சரிதான். மனோன்மணி உங்களிடம் கடனாக வாங்காத கராணத்தினால் தான் அவர் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

5) எதிரிகள் உங்களை ஆபாசமாக பேசவில்லை என்றாலும், அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன

விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

**(குறிப்பு–** சாட்சி வயதோகிகமம் காரணமாகவும், கேள்வியினை முழுவதுமாக புரிந்து கொள்ளாமல் நீதிமன்றம் கேட்ட பின்பும் முன்பு சொன்னது போலேவே சாட்சியம் அளித்தார். அவர் சாட்சியம் அவ்வாறே பதிவு செய்யப்பட்டது.

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.